RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s861

OPEN ACCESS

# தமிழ் இலக்கியங்களில் காணலாகும் மானுட வாழ்வில் பொருள்களின் முக்கியத்துவம்

மு. துர்கா [அ, *]

[அ] தமிழ்த்துறை, மகாலட்சுமி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஆவடி சென்னை-600071, தமிழ்நாடு, இந்தியா.

# The Importance of Objects in Human Life Found in Tamil Literature

M. Durga [a, *]

[a] Department of Tamil, Mahalashmi Women's College of Arts & Science, Avadi, Chennai-600071, Tamil Nadu, India

* Corresponding Author: durgaselvam1977@gmail.com

Received: 30-04-2021
Revised: 03-06-2022
Accepted: 10-06-2022
Published: 20-08-2022

Check for updates

## ABSTRACT

The object plays an important role in human life. Though a man lived in an ethnic society, he followed a barter system because he was dependent on others. Since the barter system was the most difficult method of exchange and involved loss, the commodity value coin and money came into operation as an alternative. Although the object is unstable, the object is necessary to live in the world and cannot be ignored. If there is something in the possession of a person who does not value it, the one who does not care will be respected and valued. The household must have intended to remain established. It is very difficult to earn money. For that reason, it has been customary since then to the present day for the man to leave the woman for the sake of the necessities of life. If everyone wants to live with everything, he has to give it to others and live. When one has wealth, one does not know its value. The value of wealth is known only when you are subjected to poverty. It is better to work hard and live richly rather than to live on credit. It is not the best life. A person who spends more than he needs is a spendthrift. He who does not spend despite the need is a miser, so it is better to spend according to the need and live according to the need. When you spend money in a good way on the right path, it will bring happiness not only to yourself but also to your relatives. Savings are the ones that raise the quality of life of an individual. In 2008, many countries, including the United States, were affected by the global economic slowdown, but India did not suffer that much because of the saving habits of our people that made money a part of life. Now it is only when there is money that life becomes great. People have created an environment in which meaning is very essential for human life.

**Keywords:** Ethnic Society, Tamil Literature, Environment, Objects

## முன்னுரை

மனித வாழ்க்கை அரிதானது, உயர்வானது மானிடப்பிறவியைப் பெற்ற மக்கள் தாங்கள் வாழும் வாழ்க்கைக்கு சில நெறிமுறைகளைப் பின்பற்றி வாழ்தல் நலம் பயக்கும். எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்றில்லாமல் இப்படித்தான் வாழவேண்டும் என்று இலட்சியத்தோடு வாழ்ந்தால் நம் வாழ்க்கை அர்த்தமுள்ளதாகும்.

அறம், பொருள், இன்பம், வீடு என்ற உறுதிப் பொருட்களை அடிப்படையாகக் கொண்டு நம் வாழ்க்கை முறை அமைந்துள்ளது. இறுதி இலட்சியமான வீடுபேறு (விடுதலை) என்பது இறைவனின்

திருவடியை அடையும் மோட்சப் பெருவாழ்வு. முதல் மூன்றும் இப்பூவுலகில் மனிதன் மேற்கொள்ள கூடியவை. அதாவது 'அறத்தோடு பொருளீட்டி வாழ்க்கையின் இன்பங்களை துய்க்கும் பொருட்டு வாழ்தல்'. இவற்றில் பொருள் என்ற வார்த்தைக்கு நிறைய அர்த்தங்கள் இருக்கிறது. இந்த இடத்தில் செல்வம், பணம் என்ற அடிப்படையில் ஒரு சில தகவல்களை நாம் பார்க்கலாம்.

## தேடும் பொருள்

மானுட வாழ்க்கைப் பொருளால் ஆனது. பொருள் நிறைந்த வாழ்க்கை வாழும் மனிதன் இனக்குழு சமூகமாக வாழ்ந்த போது தன்னிடம் உள்ள பொருளை கொடுத்து விட்டு தனக்குத் தேவையான பொருட்களைப் பெற்றுக் கொண்டான். ஒவ்வொரு சமுதாயத்தினரும் தாங்கள் வாழ்ந்த இயற்கைச் சூழலுக்கு ஏற்பவும் பொருளாதார வளர்ச்சி நிலைக்கேற்பவும் பல்வேறு பொருட்களைப் பண்டமாற்று முறையில் பரிமாறிக்கொண்டனர். மேலும் இம்முறையில் சேவை செய்பவர்களுக்கு ஊதியமாக அரிசி, தானியங்கள் முதலான பொருட்கள் கொடுக்கப்பட்டன. பொருட்களையோ, சேவைகளையோ பெறும் போது அனைத்துவித பொருட்களும் பரிமாறப் பட்டாலும் பின்னர் உப்பு, சிப்பி போன்ற சில குறிப்பிட்ட பொருட்கள் மட்டுமே பரிமாற்ற அலகுப் பொருட்களாக பயன்படுத்தப்பட்டன.

நெல்லே விலையைக் கணக்கிட அடிப்படையாக இருந்தது என்பர். உப்பும் நெல்லும் ஒரே மதிப்பு உடையனவாக இருந்தன என்பதை

“நெல்லும் உப்பும் நேரே ஊரீர்

கொள்ளீ ரோவெனச் சேரி தொறும் நுவலும்”

என்னும் அகப்பாடல் மூலம் அறியலாம் (Puliyur Kesigan, 2010).

பண்டமாற்று முறை என்பது பரிமாற்றத்திற்கு மிகவும் சிரமமான முறையாகவும், இழப்பை உள்ளடக்கியதாகவும் இருந்தது. இதனால் பொதுவானதொரு மாற்றுப் பொருளின் தேவையை உணரத் தொடங்கினர். எனவே பொருட்களைக் கொடுப்போர் வாங்குவோர் என இரு தரப்பினருக்கும் நட்டமில்லாத "இணை மதிப்புள்ள மாற்று" (double co-incidence) தேவைப்பட்டுள்ளது இதனால் பொருட்களுக்கு ஏற்றாற்போல் மதிப்புடைய உலோகத் துண்டுகளை பயன்படுத்தியுள்ளனர். அவற்றை நாணயம் என்றனர்.

தமிழகத்தின் பல்வேறு அரசர்கள் பயன்படுத்திய நாணயங்கள் பொன்னாலும், வெள்ளியாலும், செம்பாலும் செய்யப் பட்டன. அவ்வகை நாணயங்கள் அக்கம், மாடை, கழஞ்சு, அன்றாடு, நாற்காசு, காருங் காசு என அழைக்கப்பட்டன.

தமிழ் மன்னர்கள் புலவர்களையும் இரவலர் களையும் ஆதரித்து வந்துள்ளனர் என்பதை இலக்கியங்கள் வாயிலாக அறியலாம். அரசர்களை நாடி வந்து வாழ்த்திப் பாடும் போது அந்தணர்களுக்கும், புலவர்களுக்கும் மன்னர்கள் பரிசு பொருட்களோடு பொற்காசுகளும் வழங்கப்பட்டன.

"அந்தணர் ஆவொடு பொன் பெற்றார் நாவலர்

மந்தரம் போல் மாண்ட களிறு ஊர்ந்தார்"

பண்டமாற்று வழங்கிய காலத்தில் காசு வழங்கப்பட்டது என்பதை சங்க இலக்கியமான அகநானூறு புலப்படுத்துகிறது.

"புல் இலை நெல்லிப் புகர் இல் பசுங் காய்

கல் அதர் மருங்கில் கரு வளி உதிர்ப்ப

பொலம் செய் காசின் பொற்பத் தாஅம்"

பின்னர் பண்டமாற்றிற்கு மாற்றாக பண்ட மதிப்பு பணம் செயற்பாட்டிற்கு வந்தது. அத்தகைய பணத்தைக் கொண்டு செல்வ வளத்தைப் பெருக்கி சுற்றத்தோடு சிறப்பாக வாழ்தலே சிறப்பு எனக் கருதிய மக்கள் பொருளைத் தேடும் முயற்சியில் ஈடுபடுகின்றனர் (Puliyur Kesigan, 2010).

## பொருள் இன்றியமையாதது

பொருள் தான் வாழ்க்கை என்பதில்லை ஆனால் பொருள் இல்லாமல் வாழ்க்கை இல்லை அது தான் உண்மை.

வாழ்க்கைக்குப் பொருள் அவசியமாகிறது அதனை பொருட்படுத்தாமல் இருக்க முடியாது. உலகத்தில் வாழும் அனைத்து உயிர்களிடத்தும் அன்பு செலுத்தி கருணையோடு வாழ்ந்தால் அமரர் உலகம் கிட்டும். பொருள் இல்லாதவர்கள் இம்மண்ணுலகில் வாழ்வது என்பது சிரமம் என்தபனை,

“அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு

இவ்வுலகம் இல்லாகி யாங்கு“

என்ற குறள்வழி பொருளின் அவசியத்தை தெளிய முடிகிறது (Manickam, 2005).

"பொருள் என்பது சங்க காலத்தில் பலராலும் போற்றத்தக்க ஒன்றாக மட்டுமன்றி அவ்வுடைமையால், அறம் என்னும் உயர்த்தக வினைப் புரியும் அதன் வழிப் புகழ் பெறும் உயர் மதிப்பினை அடையவும் ஆகும் எனக் கருதப்பட்டது. நில்லா உலகத்திலிருந்து நில்லாப் பொருள்வழி நிலைத்த புகழ் பெறலாம் என எண்ணினர்" என்கிறார் (Balasubramanian, 1994).

## இல்லறத்தில் பொருள்

பொருள் நிலையற்றது என்றாலும் உலகினில் வாழ்வதற்கு பொருள் அவசியம். இல்லற வாழ்க்கையை வாழ்வதற்கு பொருள் வேண்டும். இல்லையெனில் இல்லறக் கடமையாற்றுவது என்பது கடினம். அதிகமான பொருள் தேவை இல்லை என்றாலும் வேண்டிய அளவிற்காவது பொருள் வேண்டும் என்பதே யதார்த்தம்.

"அறன்கடை படாஅ வாழ்க்கையும் என்றும்

பிறன்கடைச் செலாஅச் செல்வமும் இரண்டும்

பொருளின் ஆகும்”

அறம் செய்து பிறர் பழிக்காத இல்வாழ்க்கை வாழ வேண்டும். வாழ்க்கைக்காக பிறர் வாசற்படிக்குச் செல்லக்கூடாது. இந்த இரண்டு நெறிகளைப் பின்பற்றுவதற்கு செல்வம் உதவும் இல்லறம் நல்லறமாவதற்குப் பொருள் வேண்டும் என்பதை அகநானூற்றுப் பாடல் வழி அறிய முடிகிறது (Puliyur Kesigan, 2010).

## பொருள் தரும் மதிப்பு

பொருட்டாக மதிக்காதவரிடத்தில் பருள் இருப்பின் பொருட்படுத்துவர். மதிப்பும் மரியாதையும் தேடி வரும்.

“பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்

பொருளல்ல தில்லை பொருள்"

எந்தவிதமான திறமை இல்லாதவர்கள் இடத்து பொருள் இருப்பின் எல்லோராலும் மதிக்கப்படுவர் (Manickam, 2005). அதேசமயம், பொருளாதாரத்தில் நலிவுற்றவனை உறவினர்கள் மதிக்கமாட்டார்கள். அன்பு நிறைந்த கணவனாக இருந்தாலும் அவனது மனைவி விரும்பமாட்டாள்.

அவனைப் பெற்ற தாய்க் கூட விரும்பமாட்டாள். அவனுடைய பேச்சிற்கு யாரும் முக்கியத்துவம் தரமாட்டார்கள். அவனை ஒரு பொருட்டாகவே எண்ண மாட்டார்கள் இதனை,

"கல்லானே யானாலுங் கைப்பொருளளொன் றுண்டாயின்

எல்லாருஞ் சென்றங்கு எதிர்கொள்வர் - இல்லானை

இல்லாளும் வேண்டாள் மற்று ஈன்றெடுத்த தாய் வேண்டாள்

செல்லாது அவன் வாயிற் சொல்"

என்ற நல்வழி பாடல் மூலம் அறியலாம் (Venkatasami nattar, 2008).

## பொருள் வயின் பிரிதல்

தலைவன் தலைவியைத் தனித்து இருக்கச் செய்து பிரிந்து செல்லுதலே பிரிவு. இச்செயல்பாடு களவு, கற்பு என்னும் இருவகைப்பட்ட வாழ்விலும் நிகழும். "இரண்டு மனித உயிர்களுக்கிடையே காதல் உறவின் இயக்கம் களவு, கற்பு என்னும் இரு கூறுபட அமையும் அமைப்பினைப் படைப்பிலக்கியம் குறிக்கோள் நெறியில் எடுத்தியம்புகிறது. வடமொழி வட இந்தியச் சார்புடைய இந்துப் பண்பாட்டின் தாக்கம் ஏற்படுவதற்கு முன்பாகத் தமிழ் மண்ணுக்கே உரிய எதையும் சாராத தமிழர்களுக்கே இயல்புரிமை கொண்ட தமிழ்ப் பண்பாடு தென்னிந்தியாவில் நிலவியது என்பது மறுத்துரைக்க முடியாத உண்மையாகும்" என்ற கமில்சுவலபில் அவர்களின் கூற்றின் மெய்ப்பாட்டினை இங்கு நோக்கத்தக்கது.

கற்பு மணம் புரிந்துக்கொண்டு தலைவன் தன் இல்லற வாழ்வுக்குத் தேவைப்படும் பொருளை ஈட்டுதல் காரணமாகச் செல்லுதலே பொருள்வயின் பிரிவு. இது அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்னும் நான்கு பிரிவினருக்கும் உரியது. இதற்குரிய காலம் ஓராண்டு எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

களவு மணம் நிகழும் காலத்தும் தலைவன் 'பொருள் தேடிக் கொண்டு வந்த பின் மணம் செய்துக் கொள்கிறேன்' என்று உறுதிமொழி அளித்து விட்டு பிரிந்து போதல் 'வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரிதல்' என நம்பியகப் பொருள் சுட்டுகிறது.

இல்லறம் இனிதே அமைய பொருள் வேண்டும். பொருள் ஈட்டுவது என்பது மிகக் கடினம். பொருளை கொணர்தல் பொருட்டு இளமையிலேயே தலைவன் தலைவியை விட்டுப் பிரிந்து செல்லும் நிலையில் தலைவி பிரிவுத்துயர் தாங்காமல் வருந்துகிறாள். தலைவன் பல இன்னல்களை எதிர்கொண்டு செல்ல வேண்டியுள்ளது. அதாவது நீரின்றி வறண்ட கொடிய விலங்குகளும் கள்வர்களும் நிறைந்த காட்டை கடந்து பொருளீட்ட பிரியத்தான் வேண்டும் என்று கூறுவதாக

"நெடுங்கழை திரங்கிய நீரி லாரிடை

ஆறு செல் வம்பலர் தொலைய மாறு நின்று

கொடுஞ்சிலை மறவர் கடறுகூட் டுண்ணும்

கடுங்கண் யானைக் காண நீந்தி

இரப்பர்கொல் வாழி தோழி நறுவடிப்

பைங்கால் மா அத் தந்தளிர் ரன்ன

நன்மா மேனி பசப்ப

நம்மினுஞ் சிறந்த அரும்பொருள் தரற்கே" (Puliyur Kesikan, 2013)

பொருள் ஈட்டுவது என்பது எளிதன்று. கடினமாக உழைத்தால் தான் வெற்றி என்ற இலக்கை எட்ட முடியும். கடல்கடந்தாவது செல்வத்தை பெருக்க வேண்டும் என்பதை, "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்ற கொன்றை வேந்தன் வரிகள் மூலம் அயல்நாட்டிற்குச் சென்று பொருள் தேடுவது

என்பது அன்றையக் காலம் தொட்டே இருந்து வந்துள்ளது. பொருளீட்ட கடல் கடந்து செல்பவர்கள் பெண்களை அழைத்துச் செல்வது இல்லை

"முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை"

எனத் தொல்காப்பியம் இயம்புகிறது (Subramaniyan, 2010).

பொருள் தேடுவதற்காக அயலகம் செல்பவர்கள் செல்வ வளத்தை பெருக்குவதற்காக இருந்தாலும் மனைவி மக்களையும், உற்றார் உறவினர்களையும், நண்பர்களையும் விட்டுப் பிரிந்து சென்றிருப்பதனால் பல நேரங்களில் தனிமையினையும், வெறுமையினையும் உணர்கின்றனர்.

பிரிவு என்பது தலைவன் தலைவி இருவருக்கும் மிகுந்த வருத்தத்தையும், துன்பத்தையும் தரக்கூடியது. எனினும் தலைவன், தன்னை சார்ந்து இருக்கக்கூடிய அனைவரும் மகிழ்வுடன் வாழ்வதற்கு பொருள் வேண்டும் என்று பொருள்வயின் பிரிதல் மேற்கொண்டுள்ளான்.

தனிமனித வாழ்வில் இன்பம் துய்த்தலும், பொருள் தேடுதலும் ஆகிய இரண்டனுள் எதனை மேற்கொள்வது என்ற மனப் போராட்டத்தை பாலைத்திணைப் பாடல்கள் எடுத்துரைக்கிறது.

"செல்லல் தீர்கம் செல்வாம் என்னும்

தேய்புரிப் பழங் கயிறு போல" (Paramasivan, 2016)

பிரிவுத்துயர் ஆற்ற முடியாமல் வருந்தும் தலைவி பிறர் அறியாவண்ணம் வருத்தத்தை மனதினுள் மறைத்து, தலைவனின் இலட்சியம் நிறைவேற, துணை நின்று அவனது பிரிவுக்கு உடன்படுதலே மனைவியது கடன் என்பதை விளக்கும்

"பெருநகை கேளாய் தோழி! காதலர்

ஒருநாள் கழியினும் உயிர்வேறு படுஉம்

பொம்மல் ஓதி! நம்இவண் ஒழியச்

செல்ப என்ப தாமே சென்று

தம்வினை முற்றி வரும்உம் வரை நம் மனை

வாழ்த்தும் என்ப நாமே"

வாழ்வில் எல்லோருக்கும் அறம் செய்யும் பேறு கிடைக்கப் பெறுவது அரிது. கொடுக்கின்ற மனது எல்லோருக்கும் இருக்காது அப்படி கொடுக்க வேண்டும் என்று எண்ணினால் தன் நிலையை உயர்த்திக்கொள்ள பொருளாகிய செல்வம் வேண்டும் (Paramasivan, 2016).

பகை தான் எல்லா வற்றிலும் பெரியது 'பணம் பகையை வேரறுக்கும்' பகைவரை வென்று பிறரைப் பேணாதவர்களை அழிக்கும். பணபலம் படைத்தவனிடத்தில் யாரும் பகைத்துக் கொள்ள மாட்டார்கள் மாறாக அவர்களுடன் நட்பு கொள்ளவே விரும்புவார்கள்.

'அன்பின் பரிமாற்றம் பரிசளித்தல்' பரிசுப் பொருட்களைப் பெறுபவர் போலவே பரிசு கொடுப்பவரும் தங்களை நினைத்து மகிழ்ச்சி கொள்கின்றனர். மனைவி தன் கணவனிடம் தனக்கு வேண்டியவற்றை உரிமையோடு கேட்பாள். அவள் கேட்டு இல்லை என்று மறுக்காத அவனும் அவளது விருப்பங்களை நிறைவேற்றி மகிழ்வான். தலைவன் தலைவியின் மீது கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்த, விரும்பியவற்றை தர முயல்வதற்கு பொருட்செல்வம் வேண்டும்.

பழந்தமிழ் இலக்கியமான கலித்தொகை இவ்விதம் எடுத்துரைக்கின்றது.

"அரிதாய அறன் எய்தி அருளி யோர்க்குக்கு அளித்தலும்

பெரிதாய பகை வென்று பேணாரைத் தெறுதலும்

புரிவு அமர் காதலின் புணர்ச்சியும் தரும் என

பிரிவு எண்ணிப் பொருள்வயிற் சென்ற நம் காதலர்"

இவ்வாறு இல்லாதவர்களுக்கு அளிக்கும் அறம், எதிரியை அழிக்கும் பொருள், இனிய வரைத் துய்க்கும் இன்பம் ஆகிய மூன்றையும் செல்வமாகிய பொருள்தரும். இப்படி சொல்லிவிட்டு நம் காதலர் சென்றார் எனத் தலைவி தோழிக்கு கூறுவது போல் அமைந்த பாடல் மூலம் அறியலாம். வாழ்விற்கு இன்றியமையாத பொருளுக்காக பிரிந்து செல்லுதல் என்பது வழக்கத்தில் உள்ளது (Puliyur Kesikan, 2009).

## செல்வத்துப் பயனே ஈதல்

மனிதனுக்கு பசி இருக்கும் வரையில் பொருள் தேவையும் இருக்கும். அடிப்படை தேவைகளான உண்ணும் உணவும், உடுத்தும் உடையும் எல்லோருக்கும் ஒன்றுதான். தேவைக்கு மீறிய செல்வம் இருந்தால் அதை பயன்படுத்த முடியாது ஆகவே தான் பெற்ற செல்வத்தை பிறருக்கு பகிர்ந்து கொடுப்பது தான் செல்வத்தை பெற்றதன் பயன். அதைவிடுத்து எல்லாம் எனக்கே எனக்கு 'நான் மட்டுமே அனுபவிப்பேன்' என்று வாழ்ந்தால் பலவகையான இன்பங்களை எல்லாம் இழக்க நேரிடும். இந்த மிகப்பெரிய வாழ்வியல் அறத்தை உரைத்தவர் கடை சங்கத்தின் தலைமைப் புலவர் நக்கீரர்.

“உண்பது நாழி உடுப்பவை இரண்டே

பிறவும் எல்லாம் ஓரொக் குமே

அதனால் செல்வத்துப் பயனே ஈதல்

துய்ப்பேம் எனினே தப்புந பலவே”

எல்லோரும் எல்லாம் பெற்று வாழ வேண்டுமெனில் பிறருக்குக் கொடுத்து வாழ வேண்டும் (Puliyur Kesikan, 2002). பிறருக்கு கொடுப்பதனால் அவர்கள் அடையும் மகிழ்ச்சியை கண்டு மன நிறைவடைவதை மகிழ்ச்சி. பொருளீட்டி செல்வத்தை சேர்த்து வைப்பதன் நோக்கம் தேவைகளை பூர்த்தி செய்து செம்மையாக வாழ்வதற்கு. பணம் சேர்த்து வைப்பது தவறில்லை ஆனால் தன் தேவைக்கு பயன்படாத பணத்தால் பலன் இல்லை. நிலையற்ற மனித வாழ்வில் சிலர் பணத்தின் மீது மோகம் கொண்டு பிறருக்குக் கொடுக்காமல் தானும் அனுபவிக்காது வாழ்கின்றனர்.

"பாடுபட்டுத் தேடிப் பணத்தைப்

புதைத்து வைக்கும்

கேடுகெட்ட மானிடரே

கேளுங்கள் - கூடுவிட்டிங்

காவிதான் போயினபின் பாரே

யநுபவிப்பார்

பாவிகாள் அந்தப் பணம்"

பணம் என்பது புழக்கத்தில் இருக்க வேண்டிய ஒன்று அதைவிடுத்து பணத்தாசைக் கொண்டு மறைத்து வைத்தல் கூடாது. நாட்டின் பொருளாதாரத்தையே பாதிக்கக் கூடிய செயலாகும் (Venkatasami nattar, 2008).

## வறுமையின் கொடுமை

வறுமை நிலையென்பது மிகக் கொடுமையானது. அதனால்தான் 'கொடிது கொடிது வறுமை கொடிது' என்றாள் ஔவை பிராட்டி. ஒருவரிடத்தில் செல்வம் இருக்கும்போது அதன் அருமை தெரியாது. வறுமை நிலைக்கு ஆட்படும் போது தான் செல்வத்தின் மதிப்பு தெரியும். மூதாதையர்கள் சேர்த்து வைத்த செல்வம் மட்டுமின்றி தான் கடினமாக உழைத்த செல்வத்தையும் ஊதாரித்தனமாக

செலவிட்டு வறுமை நிலையை அடையும்போது நாணத்தால் வெட்கி பிறரை ஏதிர் கொள்ள முடியாமல் தன் நிலையை எண்ணி வருந்துவர்.

"தாங்கொணா வறுமை வந்தால்

சபைதனில் செல்ல நாணும்

வேங்கை போல் வீரம் குன்றும்

விருந்தினர் காண நாணும்

பூங்கொடி மனையாட் கஞ்சும்

புல்லருக கிணங்கச் செய்யும்

ஓங்கிய அறிவு குன்றி

முகமெல்லாம் பழிக்குந் தானே"

என்று விவேக சிந்தாமணி வறுமையின் கொடுமையிணை விளக்குகிறது (Ramasubramaniyam, 1997).

## பொருள் இல்லாதார் நிலை

பொருள் இல்லாத வாழ்க்கை முழுமை அடையாது. இல்லாதவனை இழிவாகப் பார்க்கும் சமூகம் இதனை,

"இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை

எல்லாரும் செய்வர் சிறப்பு"

நல்லவனாக இருந்தும் பொருள் இல்லை என்றால் எள்ளி நகையாடுவதும், தீயவன் என்று தெரிந்தும் கூட பொருள் இருப்பின் எல்லோரும் சென்று அவனை சிறப்பு செய்வதும் மனித இயல்பு. அவமதிக்க வேண்டியவர்கள் ஏழைகள் என்பதும், தீய எண்ணம் கொண்டு வாழலாம் என்பது பொருள் அல்ல மக்கள் அனைவரும் பொருளின் அவசியத்தை உணர்ந்து மதிப்பான வாழ்க்கை வாழ வேண்டுமென்று குறள் வழி சுட்டுகிறார் வள்ளுவப் பெருந்தகை (Manickam, 2005).

## வரவு மீறிய செலவு

உழைத்துப் பொருளீட்டி செல்வ செழிப்போடு வாழ்வதே சிறந்த வாழ்க்கை. அதை விடுத்து கடன் பெற்று வாழ்வது சிறந்த வாழ்க்கை ஆகாது. 'கடன்கொண்டான் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்ற அருணாச்சலக் கவிராயரின் பாடலையொத்து கடனாளிகள் யாரும் கலங்குவதில்லை அன்றோ கடன் வாங்குவதை இழிவாக எண்ணினார்கள். இன்றோ சிலர் கடன் வாங்குவதற்கு அஞ்சுவதே இல்லை. கடன் வாங்கியாவது ஆடம்பரச் செலவு செய்ய நினைக்கின்றனர்.

வருவாய்க்கு மீறிய செலவு செய்துவிட்டு கடன் வாங்கி, மானமிழந்து, சமுதாயத்தில் மதிப்பிழந்து, தன்னுடைய சொந்த புத்தியை இழந்து, ஓடி ஒளியும் அவல நிலைக்கு ஆளாகின்றனர். செல்கின்ற திசையெல்லாம் திருடன் என்ற இழி பெயரையே ஏற்கின்றனர். இந்தப் பிறவி மட்டுமல்லாது ஏழு பிறவியிலும் தீயவனாகவும், நல்லவர்களுக்குக் கூட ஆகாதவனாகவும் மாறிவிடுவர் என்பதை உணர்த்தும் நல்வழி பாடல்

"ஆன முதலில் அதிகம் செலவானால்

மானம் அழிந்து மதிகெட்டுப் - போனதிசை

எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்

நல்லார்க்கும் பொல்லனாம் நாடு"

வருமானத்திற்கு அதிகமாக செலவு செய்துவிட்டு அதனை ஈடுகட்ட கடன் வாங்குவதும் கடனை கட்டமுடியாமல் மானமிழந்து தவிப்பதும் வேதனைக்குரியது. தேவைக்கு அதிகமாகவே செலவிடுபவன் ஊதாரி. தேவை இருந்தும் செலவிடாதவன் கஞ்சன் ஆகையால் தேவைக்கு ஏற்ப செலவு செய்து வாழ்தலே நலம் (Venkatasami nattar, 2008).

## நல்வழியில் பொருளீட்டுதல்

பொருள் ஈட்டக்கூடியவன் தலைவன் இல்லத்தை பராமரிக்கக் கூடியவள் தலைவி என்ற முறைமையை மாற்றி குடும்ப பொருளாதார நிலையை உயர்த்த கணவனும் மனைவியும் இணைந்து பொருள் ஈட்டுகின்றனர். வசதி வாய்ப்புகள் பெருகப் பெருக மக்களின் தேவைகளும் பெருகிக் கொண்டே செல்கிறது. சமுதாயத்தில் சம அந்தஸ்துடன் வாழ பொருள் அவசியம்.

பொருள் ஈட்டுவதில் பலருக்கும் பொருள் சார்ந்த அறிவும், திறமையும் இருப்பதில்லை அவ்வாறு திறமை இருந்தாலும் கூட அவர்களை சார்ந்தவர்கள் அச்சுறுத்தவே அத்தகைய எண்ணத்தை கை விடுகின்றனர். சோம்பலையும் அவநம்பிக்கையும் தகர்த்தெறிந்து விட்டு 'தன்னால் முடியும்' என்று தன்னம்பிக்கையுடனும் பொறுப்புடனும் பொருள் சேர்ப்பவர்கள் ஓரளவிலேயே இருக்கின்றனர்.

ஒரு சிலரோ தீய வழிகள் உட்பட எந்த வழியிலாவது பொருள் சேர்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் செயல்படுகின்றனர். இது சமூகத்திற்கு தீங்கு விளைவிக்கக்கூடியது.

நேர்வழியில் பொருளீட்டி நல்ல வழியில் செலவு செய்யும் போது தனக்கு மட்டுமல்லாது தன்னைச் சார்ந்த உறவுகளுக்கும் மகிழ்ச்சியை தருவதாக இருக்கும். பொருளீட்ட எடுக்கின்ற ஒவ்வொரு முயற்சியும், வெற்றியும் மற்றவர்களுக்கு உந்துதலாக அமையும். நல்ல வழியில் பொருளீட்டுதல் தக்க நன்மை தரும்.

## பொருள்வளம் காத்தல்

உலகமே பொருளை விரும்பி நடைபெறுகிறது. வண்டிச் சக்கரம் போல மாறிப் புரளும் செல்வத்தைக் கணக்கிட்டு செலவு செய்பவர்களிடத்திலிருந்து அந்த செல்வம் நீங்காது. தனி மனித வாழ்வின் தரத்தை உயர்த்துவது சேமிப்பு. வாழ்க்கை என்பது பொருளாதார ரீதியாக எல்லோருக்கும் ஒரே மாதிரியாக அமைவதில்லை ஏற்றத்தாழ்வுகள் நிறைந்தது. அந்த ஏற்றத்தாழ்வுகளை சமன் செய்வது சேமிப்பு. உழைப்பு இல்லையேல் பொருளில்லை இளமையில் கடுமையாக உழைத்து ஈட்டும் பொருளை அப்படியே செலவு செய்யாமல் அவற்றில் ஒரு பகுதியை சேமிக்க வேண்டும் அப்போதுதான் எதிர்பாராமல் செலவுகள் நேரும் காலத்திலும், முதுமைக் காலத்திலும் சேமித்து வைத்தவை உதவும் இந்த சேமிப்பு பழக்கம் தொன்று தொட்டு தமிழர்களிடையே இருந்து வந்தது. இயற்கை சீற்றங்கள், படையெடுப்பு, பஞ்சம் உள்ளிட்ட காலங்களில் மக்கள் பசிப்பிணியைப் போக்க வரலாற்றுக் காலங்களில் தமிழர்களால் கட்டப்பட்ட கோயில்களில் கோபுரக் கலசங்களில் தானியத்தை அடைத்து வைத்து பயன்படுத்தினர்.

கடந்த 2008 ஆம் ஆண்டில் ஏற்பட்ட உலகப் பொருளாதார மந்த நிலையால் அமெரிக்கா உட்பட பல நாடுகளும் பாதிப்புக்குள்ளானது ஆனால் இந்தியா அந்த அளவு பாதிப்பை சந்திக்க வில்லை காரணம் நம் மக்களிடம் இருந்த சேமிப்பு பழக்கமே. பொருள் வளத்தை போற்றிப் பாதுகாக்க வேண்டும். அவ்வாறு பாதுகாக்காதவர்களிடத்தில் பொருளானது ஒருபோதும் இருக்காது. பெரும் இழப்பையே சந்திக்க நேரிடும்.

"பொருளாட்சி போற்றாதார்க்கு இல்லை"

என்பதை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வள்ளுவப்பெருமான் திருக்குறளில் உணர்த்தியுள்ளார் (Manickam, 2005).

வாழ்க்கையில் ஒரு அங்கமாக இருந்த பணம் இப்பொழுது பணம் இருந்தால்தான் வாழ்க்கை என்றாகிவிட்டது. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் எதிர்காலத்தை மனதில் கொண்டு அவர்கள் அறிவு வளர்ச்சி மற்றும் தன்னம்பிக்கையுடன் வாழ்வதற்கு கல்வி அவசியம் என்பதால் சம்பாதிக்கும் பணத்தில் பெரும் தொகையை படிப்பு செலவிற்கு செலவிட வேண்டியுள்ளது.

இயற்கை உணவினை உண்டு வாழ்ந்து வந்த மக்கள் இயந்திர மயமான உலகில் உணவில் கவனம் செலுத்தாமல் பல்வேறு நோய்களுக்கு ஆளாகின்றனர். மற்றும் எதிர்பாராது ஏற்படும் விபத்துக்கள் போன்றவற்றால் மருத்துவத்திற்கு என்று ஒரு தொகை ஒதுக்க வேண்டியுள்ளது. அதுமட்டுமல்லாது திருமணம் வீடு கட்டுதல் தொழில் செய்தல் போன்ற செலவினங்களுக்காக வங்கியில் பணம் சேர்த்தல் அதாவது மூத்த குடிமக்கள் சேமிப்பு வங்கி கணக்கு, பெண்கள் சேமிப்பு கணக்கு, சாதாரண சேமிப்பு கணக்கு, கட்டணமில்லாத அடிப்படை வங்கிக் கணக்கு, மாணவர் சேமிப்பு கணக்கு, என். ஆர். இ. சேமிப்பு கணக்கு, என். ஆர். ஒ சேமிப்புக் கணக்கு, வைப்புநிதி போன்றவை ஆயுள் காப்பீடு, மருத்துவ காப்பீடு, ஓய்வூதிய காப்பீடு, அஞ்சலக சேமிப்பு, தங்க நகைகள் வாங்குதல் போன்ற பலவகையான சேமிப்புகள் மக்கள் மேற்கொள்கின்றனர் காரணம் பொருளாதார ரீதியாக பாதுகாப்பாக இருக்க விரும்புவதே. எனவே சேமிப்பு பழக்கத்தை கைகொண்டு பொருள் வளத்தைப் பாதுகாத்தல் நம் கடமையாகும்.

## முடிவுரை

பொருள் மனிதனுக்கு அடிப்படைத் தேவைகளை நிவர்த்திசெய்ய மட்டுமல்ல சமூக நிலையில் அவனை அடையாளப்படுத்தவும் பயன்படுகிறது. தனக்கென ஒரு தனி அடையாளத்தை சமுதாயத்தில் ஏற்படுத்த பொருளை சேமித்து வைக்கிறான் மனிதன். வரலாற்றை உற்று நோக்கும் பொழுது இந்த நடைமுறை வழக்கத்தை நாம் அறியலாம். மனித வாழ்க்கைக்குப் பொருள் மிக அவசியம் என்ற காலச் சூழலை மக்கள் உருவாக்கியுள்ளனர்.

## References

Balasubramanian, K.V., (1994) Tamil Ilakkiyathil Samuga amaipukal, Manivasagar Pathippagam, Chennai, India

Manickam, A., (2005) Thirukkural, Manivaasagar Pathippagam, Chennai, India.

Paramasivan, T.K., (2016) Nattrinai Mollamum Uraiyum, Kalachuvadu Publication, Nagercoil, India.

Puliyur Kesigan, (2010) Agananooru, Paari Nilaiyam, Chennai, India.

Puliyur Kesikan (2009) Kalithogai, Saradha Pathippagam, Chennai, India.

Puliyur Kesikan, (2002) Purananuru, Paari Nilayam, Chennai, India.

Puliyur Kesikan, (2013) Kurunthogai Thelivurai, Saradha Pathippagam, Chennai, India.

Ramasubramaniyam, V.T., (1997) VivegaSindamani, Varthamanan Pathippagam, Chennai, India.

Subramaniyan, S.V., (2010) Tholkappiyam thelivurai, Manivasakar Pathippagam, Chennai, India.

Venkatasami nattar, N.M., (2008) Nalvali, Ramaiya pathipagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License